எடுத்து இக் கள்ளப் பழக்கத்தை அறவே ஒழிப்பதில் அக்கறை காட்டவில்லை எனவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதன்மேல் காவல் துறைக் கண்காணிப்பாளர் அப்பகுதியில் 2—5—1967 தேதியன்று திடீர் சோதனையிட்டார். இதன் காரணமாக 14 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள்மீது தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4 (1) (a) (d) (e) (k) பிரிவுகளின் கீழ் 70/67 முதல் 85/67 வரையுள்ள எண்களில் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. முன்னர் நடவடிக்கை எடுக்கத் தவறிய காவல்துறை அதிகாரிகள் இந்தத் திடீர் சோதனைக்குப் பிறகு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர். மதுவிலக்குக் குற்றங்களைக் சண்டு பிடிக்கும் பணியில் நாட்டமின்றி இருந்ததற்காக அவர்கள்மீது துறை நடவடிக்கை எடுக்கப்பட்டது. எம். எல். ஏ. கடிதத்தின்மீது எடுத்த நடவடிக்கைகளின் பலனாக, இப் பகுதியில் மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. இது தவிர, செஞ்சிப் பகுதியில் எதுமறியாத பாமரக் குடியானவர்களுக்குக் காவலர் தொல்லை கொடுத்து வருவதாகவும், அரிஷ்டங்களையும், ஆசவங்களையும் விற்பனை செய்யும் கடைகளுக்கு அதிக எண்ணிக்கையில் உரிமங்கள் கொடுத்ததன் பலனாகவே இது ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படும் கூற்றிற்கு ஆதாரமே இல்லை.

(ii) இராமநாதபுரம் நகராட்சி குடி தண்ணீர் திட்டம் நிறைவேற்றப்படாமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியமுமான காரியமொன்றை மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு திரு. டி. தங்கப்பன் அவர்கள் கொண்டு வருகிறார்கள்.

திரு. டி. தங்கப்பன்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகள் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட பொதுமுக்கியமும் அவசரமும் வாய்ந்த காரியத்தைப்பற்றிய விஷயத்தை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இராமநாதபுரம் நகராட்சி குடிதண்ணீர் திட்டம் சோதனைகள் முடிவு பெற்று நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறதால் மிக அவசரமாகத் தேவைப்படுகின்ற நிலையில் அதை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள்பற்றி அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் நகராட்சிக்கும் வழியிலுள்ள கீழ்க்கண்ட 8 ஊராட்சி மன்றங்களுக்கும் நீர்வழங்கு திட்டம் ஒன்றை நிறைவேற்ற 1966 நவம்பரில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. நீர்வழங்கு திட்டத்தை நிறைவேற்ற ரூ. 37·41 இலட்சமும், அதைப் பேணிவர ஆண்டொன்றுக்கு ரூ. 27,500-ம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(1) பொட்டிசெட்டிக்குடி.
(2) கருத்தநேந்தல்.
(3) தேவேந்திர நல்லூர்.
(4) மாவிலங்கை.
(5) கீழ்க்கோட்டை.
(6) தீயனூர்.
(7) எட்டிவயல்.
(8) அச்சுதன் வயல்.

1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி, இராமநாதபுரம் நகர மக்கள் தொகை 26,915. இராமநாதபுரம் நகராட்சியைப் பொறுத்த வரையில், நாளொன்றுக்கு ஒருவருக்கு 15 காலன் நீர் என்ற விதிப்படி

1981-ம் ஆண்டில் 36,000 மக்கள் தொகைக்கும் 1996-ல் 45,000 என்ற இறுதியான மக்கள் தொகைக்கும் தேவையான நீர் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இத் திட்டம் தயாரிக்கப்பட்டது. வழியிலுள்ள 8 கிராமங்களைப் பொறுத்தவரையில், 8,000 என்ற இறுதியான மக்கள் தொகைக்கு நாளொன்றுக்கு ஒருவருக்கு ஐந்து காலன் என்ற வீதத்தில் நீர்வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

வைகையாற்றின் ஊற்று நீரைப் பயன்படுத்துவதே இச்செயற் குறிப்பின் நோக்கமாகும். நீர்வடிகட்டும் பணிகள் (Filtration works) இராமநாதபுரத்தின் மேற்கில் உள்ள பொட்டிச்சேட்டிக்குடி கிராமத்திற்கு அருகில் அமைக்கப்படும். வைகை ஆற்றின் படுகையில் 400 அடி நீளத்திற்கு ஊடுவழி ஒன்றை அமைத்து ஊற்று நீரை வெளிக் கொணரத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு வெளிக் கொணரப்பட்ட நீரை 15 அங்குலம் விட்டமுள்ள 90,850 அடி நீளமுள்ள சிமிட்டி கான்கிரீட் குழாய்கள் மூலம் இராமநாதபுரம் நகரில் கட்டப்படவிருக்கிற குடிநீர்க்கான நீர்த் தேக்கத்திற்குக் கொண்டு செல்லப்படும். நகருக்குள் சுமார் 15 மைல் நீளத்திற்கு பகிர்மானப் பெருங்குழாய்கள் போடப்படும்.

தலைமையிட வேலைகள் குறித்த 1-ம் நிலை வேலைகளைச் சேர்ந்த 1-ம் பகுதிக்கு 1967-ல் ரூ. 11,200 மதிப்பீட்டிற்கும், நீர் ஏற்றுப் பெருங்குழாய்கள் குறித்த 11-ம் நிலை வேலைகளுக்காக ரூ. 23·37 இலட்சமும் மதிப்பீட்டிற்கும் தலைமைப் பொறியாளர் (பொதுச் சுகாதாரப் பொறி இயல்-நகராட்சிப் பணிகள்) தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கினர். தலைமை இடப்பணிகளுக்குத் தேவையான 2 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 1-ம் நிலை வேலைகளின் 1-ம் பகுதிக்காக 1967 முற்பகுதியில் ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்பும்படி விளம்பரம் செய்தபோது எவரிடமிருந்தும் ஒப்பந்தப் புள்ளிகள் வர வில்லை. எனவே, துறையின் மூலம் நிறைவேற்றப்படுவதற்கென அவ் வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. எட்டு அடி விட்டமுள்ள புதை சாக்கடைக்கான திறப்புக் கிணறு ஒன்றைக் (man hole) கட்டும் வேலை முடிந்துவிட்டது. அதை மூடுவதற்கான அடைப்பு இன்னும் போடப்படவில்லை. கோடை மாதங்களில் ஏற்புத் திறனைச் சோதித்து அறிந்த பிறகு அந்த அடைப்பு போடப்படும். குழாய்களையும் ஏனைய சாதனங்களையும் தேவையான அளவில் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிற்சாலையிலிருந்து இராமநாதபுரம் நகரத்திற்கு 15 அங்குல சிமிட்டி கான்கிரீட் குழாய்களைப் போடுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. குழாய்கள் விரைவில் போடப்படும். நீர் பகிர்மானக் குழாய்கள் போடும் திட்டம், குடி நீர்க்கான நீர்த்தேக்கம் ஆகியவைக் குறித்த விரிவான மதிப்பீட்டை மதுரையில் உள்ள (பொதுச் சுகாதாரப் பொறி இயல்) மேற்பார்வை பொறியாளர் தயாரித்து வருகிறார். நடப்பாண்டின் (1967–68) செலவிற்கென, இராமநாதபுரம் நகராட்சிக்கு ரூ. 1 லட்சம் கடன் வழங்க 1968 ஜனவரித் திங்களில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. விசை ஏற்றப் பெருங்குழாய் அமைப்பிடத்திற்குத் தேவையான நிலத்தைக் கையகப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, இத் திட்டம் மனநிறைவு அளிக்கும் வகையில் நிறைவேறி வருகிறது என்பதை இதிலிருந்து அறியலாம்.

3. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 12—காவல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 12-ஆம் எண்ணுள்ள காவல் துறை நிதிக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வருகிறார்கள்.